கடந்த 15 ஆண்டுகளாக உபயோகப்படுத்தப்பட்டு வருவதாலும், அக்கம்பெனியின் டெண்டரையும், Central Purchase committee ஏற்றுக்கொண்டது. ஆகவே, Ball Case Type-ற்கு Star Edward-ம் Disc type வால்விற்கு Sorin Valve-மே முடிவு செய்யப்பட்டன.

10-25 மணி

இதற்குப் பிறகு ஸ்டார் எட்வார்ட் கம்பெனி 17-10-1989 இல் 15 வால்வுகள் வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. 8-11-1989-இல் எங்களிடம் நிறைய வால்வுகள் இருக்கின்றன, ஆனால் பழைய பாக்கி ரூபாய் 1,22,512-ஐ அனுப்பி வைக்கும் படியும் அந்த Star Edward Company மருத்துவத் துறைக்குப் பதில் அனுப்பியிருந்தது. பாக்கி பணமும் திருப்பிக் கட்டப் பட்டது. ஆனால் வால்வுகள் வரவில்லை. மேலும் 22-11-1989-லும் 22-12-1989-லும் 7-3-1990 லும் திரும்ப திரும்ப வால்வு களை அனுப்பி வைக்குமாறு அந்த கம்பெனிக்கு கடிதம் எழுதப் பட்டது. ஆனால் இதுநாள் வரையில் அந்த கம்பெனியிலிருந்து பதிலும் வரவில்லை. வால்வுகளும் வரவில்லை. இந்த நிலையில் 10 சோரின் வால்வுகள் வாங்கப்பட்டு இருக்கிறது. ஸ்டார் எட்வர்ட்ஸ் வால்வ் 10 ஆண்டுகள் கியாரண்டி கொடுத்திருப்ப தாகவும், சோரின் வால்விற்கு கியாரண்டியே கொடுக்கப்பட வில்லை என்றும் கூறுவது முற்றிலும் தவறான செய்தியாகும். இதுவும் இந்தியன் எக்ஸ்பிரசில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. இரண்டுமே ஒரு ஆண்டு கியாரண்டி தான் கொடுத்திருக்கின்றன. ஆகவே, இதிலே எந்தவிதமான முறைகேடும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

5. கவன ஈர்ப்பு.

(அ) பள்ளிப்பட்டு வட்டத்தில் சில இராமங்களில் சூறவாளி கல் மழையால் பயிர்கள் சேதமடைந்துள்ளதால் விவசாயிகள் பாதிப்பு

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : தலைவர் அவர்களே, ''பள்ளிப் பட்டு வட்டத்திற்குட்பட்ட சில கிராமங்களில் கடுமையான சூறாவளிக் காற்றாலும், கல் மழையாலும் சுமார் 20 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நெல், கரும்பு போன்ற பயிர்கள் சேதமடைந் துள்ளதால் பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச் சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக் கிறேன் :

அறிக்கை.

5–4–1990 அன்று செங்கை-அண்ணா மாவட்டம், பள்ளிப்பட்டு மற்றும் ஆர். கே. பேட்டை பிர்காவைச் சார்ந்த சில கிராமங்களில் மாலை சுமார் 5 மணியளவில் சூறாவளி காற்றும், கல்மழையும் பெய்ததினால் நெல், வாழை, மிளகாய் போன்ற பயிர்களுக்கு பெருத்த சேதம் உண்டாகியுள்ளது. நெல் பயிர்களில் முற்றிய மணிகள் சிதறிவிட்டன. சேதம் சுமார் 80 முதல் 100 சதம் வரை உள்ளது. வாழை தார் ஒடிந்தும், மரம் சாய்ந்தும் சேதம் அடைந்துள்ளன. சேதம் சுமார் 20 முதல் 60 சதம் வரை உள்ளது. மிளகாய் பழங்கள் காற்றினால் கீழே விழுந்து விட்டன. இதன் சேதம் சுமார் 10 சதம் முதல் 20 சதம் வரை உள்ளது. பள்ளிப்பட்டு பிர்க்காவில் 80 எக்டேர் நிலப் பரப்பில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்களும், 48 எக்டேர் நிலப் பரப்பில் பயிரிடப்பட்டிருந்த வாழைப் பயிர்களும், 3.6 எக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த மிளகாய் பயிர்களும், ஆர். கே. பேட்டை பிர்காவில் 65 எக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப் பட்டிருந்த நெற்பயிரும், 94 எக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப் பட்டிருந்த வாழைப் பயிர்களும், 15 எக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த மிளகாய் பயிரும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறு/குறு நில விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக, விவசாயி வாரியாகவும், நிலப்பரப்பு வாரியாகவும் விவரமான அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. இந்த அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் வருவாய் நிருவாக ஆணையரின் கருத்தினையும் பெற்று, நிவாரணம் வழங்குவது பற்றி முடிவு செய்யப்படும்.

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : தலைவர் அவர்களே, நான் விவர அறிக்கையை படித்தேன். பள்ளிப்பட்டு பிர்க்காவில் 80 ஹெக்டேர் நிலமும், ஆர். கே. பேட் பிர்க்காவில் 65 ஹெக்டேர் நிலமும் மொத்தம் 145 ஹெக்டேர் நெல் பயிரும், 65 ஹெக்டேர் நிலத்தில் உள்ள வாழையும், 30 ஹெக்டேர் நிலத்தில் உள்ள மிளகாயும், ஆக மொத்தம் 305 ஹெக்டேர் நிலத்தில் உள்ள பயிர்கள் சேதம் அடைந்துள்ளன. நானும், ரெவின்யூ இலாக்கா அதிகாரிகளும், வேளாண்மைத் துறை அதிகாரிகளும் நேரில் சென்று ஒவ்வொரு நிலத்தையும் பார்த்தோம். அமைச்சர் அவர்கள் நெல் சேதம் 80 முதல் 100 பெர்சண்ட் என்றும், வாழை சுமார் 20 முதல் 60 பெர்சண்ட் சேதம் என்றும், மிளகாய் 10 முதல் 20 பெர்சண்ட் சேதம் என்றும் அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். அவைகளை நான் நேரில் பார்த்தேன். நெல் 100-க்கு 100 பெர்சண்ட் சேதம் அடைந்துள்ளது. நெல் நிலத்தில் விழுந்ததைக் கூட எடுக்க முடியாமல் சேற்றில் கிடந்தது. அதைப்போல வாழை அடி மரத்தோடு கீழே விழுந்துவிட்டது.

அது 'ஃபுல் மெச்சூரிட்டி' ஆகவில்லை. பாதி தரம் தான் இருந்தது. அது எதற்கும் பயன்படாது. அப்படி 100-க்கு 100 பெர்சண்ட் கெட்டு விட்டது. அதைப்போல மிளகாய் மழை காரணத்தால் விழுந்து சேற்றில் கலந்து விட்டது. அதை எடுக்கவும் முடியாது. கேழ்வரகு பயிர் போன்றவை கணக்கிலே வரவில்லை. விவசாயிகள் தங்கள் கிணறுகளுக்கு அருகில் வைத்திருந்த பாதாம் செடிகள் கூட பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான காய்கள் விழுந்து விட்டன. ஒரு காய் 50 பைசா விலை போட்டாலும் கூட லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பயிர் சேதமடைந்துள்ளது. எங்கள் தொகுதியில் சவுத் வெஸ்ட் மான்சூன், நார்த் வெஸ்ட் மான்சூன் லேட்டாக வந்தன. நார்மலை விட குறைவான ரெயின் ஃபால். எனவே, அவர்கள் சொந்த முயற்சியில் பம்ப் செட் வைத்து பயிர் செய்தார்கள். அவர்கள் முழுவதுமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு notorly they have lost the repaying capacity but they have also their borrowing power. திருப்பி கட்டக்கூடிய சக்தி இல்லை. கடன் வாங்கக்கூடிய திறமையும் கிடையாது. யாரும் அவர்களுக்கு கடன் கொடுக்கவும் முன் வருவதில்லை. ஆகவே, இந்நிலையில் அரசாங்கம் முன்வந்து அவர்களுக்குத் தேவையான விதைகள், பூச்சி மருந்து, விவசாயத்திற்கு முன்பணம் தேவைப்படுகிறது—உதவிகளைக் கொடுப்பதற்கு தயாராக ஏற்பாடு செய்வதோடு, அவர்களுக்கு காம்பன்சேஷன், ஏற்பட்ட பயிர் நஷ்டத்திற்கு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களுக்கு இன்னொரு கேள்விக்கு வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட சிறு, குறு நில விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க விவசாயம் வாரியான, நிலப்பரப்பு வாரியான விவரமான அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. இந்த அறிக்கை கிடைத்த பிறகு அரசு பரிசீலனை செய்து, எப்படிப்பட்ட உதவிகளை கொடுக்கலாம் என்று அரசு முடிவு செய்யும்.

10-30 மணி

திரு. எ. ஏகாம்பர ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கை தயார் செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. இதைப்போல மொத்தம் என்னுடைய தொகுதியிலே 305 எக்டேரிலே போய் இருக்கிறது. அந்த அறிக்கை வருவதற்குக் காலமாகும். நான் ஏற்கனவே கூட்டுறவு பட்ஜெட்டிலே சொல்லியிருந்தேன். அதற்கு கிராப் இன்சூரன்ஸ் திட்டம் 1986-லே அமுலில் இருந்தும் கூட, தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலும் அதிகமாக அது விஸ்தரிக்கப்படவில்லை. முக்கியமாக என் பகுதியிலே இல்லை. இதுபோன்று

கிராப் இன்சூரன்ஸ் திட்டம் இருந்திருந்தால் ஓரளவிற்கு விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைத்திருக்கும். அது கிடைப்பதற்குக் கூட வாய்ப்பில்லை. ஒரு காலத்திலே—நமது முதலமைச்சர் இங்கே இல்லை—நமது முன்னாள் ஜனாதிபதி ஒரு அறிக்கை விட்டிருந்தார். "The farming community is being deprived of its due share in the national wealth." எல்லாத் தரப்புக்கும் உண்டு. ஆனால் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, வேளாண்மையையே ஆதாரமாகக் கொண்டு இருப்பவர்களுக்கு எந்த வாய்ப்பும் இல்லை. எல்லோரும் நஷ்டம் அடைய ஆரம்பித்திருக்கிறார்கள். 30 லட்சம் ரூபாய்க்கு மேலே நஷ்டமாகி இருக்கிறது. முதலமைச்சர் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வது, வேளாண்மைக் காரியங்களில் ஈடுபட்டுள்ள அவர்களுக்கு நஷ்டப் பரிகாரம் கொடுப்பதற்கு வாய்ப்பு உடனடியாக இல்லாவிட்டாலும் கூட, முதல்வர் அவர்களுடைய டிஸ்கிரிஷனுக்கு அனுப்பி உடனடியாக அவர்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய முன்வருவார்களா என்று நான் இந்த நேரத்திலே வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பயிர் இன்சூரன்ஸ் திட்டம் 1986-லேயிருந்து அமுல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு வட்டார அளவிலே உள்ள விவசாயிகள் இன்சூரன்ஸ் செய்து கொள்ள வருகிறபோது, அவர்களுக்கான பிரிமியத்தைக் கூட மத்திய சர்க்கார் இன்சூரன்ஸ் கம்பெனிக்குத் தந்துவிடுகிறார்கள். பிறகு இப்படிப்பட்ட ஒரு நஷ்டம் அல்லது பாதிப்பு விவசாயிகளுக்கு வருகிறபோது அந்த விவசாயிகள் இன்சூரன்ஸ் அலுவலர்களை அணுகுகிறபோது அந்த வட்டாரத்தைச் சென்று பார்த்து சராசரியாக எவ்வளவு நஷ்டம் என்று ஒரு கணக்குப் பார்க்கிறார்கள். அப்படிக் கணக்குப் பார்க்கிற காரணத்தாலே, பயிர் இன்சூரன்ஸ் செய்யக்கூடிய நம்முடைய விவசாயிகள் அதிலே,தமிழகத்திலே முழுமையாக பயன்பெற முடியாத ஒரு நிலைமை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள் இருப்பினும் இந்த அரசைப் பொறுத்தவரையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மழையினால், அல்லது மழையில்லாத காரணத்தால், சூறாவளிக் காற்றினால், அல்லது பூச்சிகளால் பெரும் இழப்புக்கு ஆளாகிறபோது, தமிழ்நாட்டிலே .எப்போதுமே இல்லாத அளவிற்கு இப்போதுதான் அவர்களுக்கு ஓரளவிற்கு நிவாரணம் அளிக்கப்படவேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்னோடு கலந்து பேசி, இந்த ஆண்டு பருத்தியிலே காய்ப்புழுவினால் .பாதிக்கப்பட்டவர்களுக்குக் கூட ஓரளவிற்கு நிவாரணம் அளிக்க அரசு முன்வந்திருக்கிறது. அதைப் போலத்தான் இந்த கல்மழையினால் பள்ளிப்பட்டு பிர்க்காவிலே சேதம் .ஏற்பட்டிருப்பது 305 எக்டேருக்கு என்று

கணக்கு சொல்லப்படுகிறது. முழுமையான விவரத்தைச் சேகரித்த பிறகுதான் அதன் பின்னாலே எப்படிப்பட்ட உதவிகளை அந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கமுடியும் என்று அரசு முடிவு எடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பரமக்குடி போன்ற பகுதிகளில் நூல் விலை உயர்வாலும் நூல் கிடைக்காததாலும் நெசவாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ், திருவாளர்கள் குமரி அனந்தன், எச். எம். ராஜு மற்றும் ஜி. ஜி. குருமூர்த்தி ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியிலும், எமனேசபுரத்திலும் கைத்தறி நெசவாளர்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ''தமிழகத்தில் பரமக்குடி போன்ற'' என்று தொடங்குங்கள்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, பரமக்குடி தொகுதி பரமக்குடியிலும், எமனேசபுரத்திலும், உள்ள கைத்தறி நெசவாளர்கள் நூல் கிடைக்காமல்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாங்கள் கொடுத்து இருக்கிறோமே. அது கையிலே இல்லையா? அதைப் படியுங்கள்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்தில் பரமக்குடி போன்ற பல்வேறு பகுதிகளில் நூல்விலை உயர்வாலும் மற்றும் நூல் கிடைக்காததாலும் நெசவாளர்கள் பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்: